VOICE OF CITIZENS

CENTRE FOR POLICY ALTERNATIVES

சுருக்கமான விவரணம்

# இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகளைத் துரிதமாக அடையாளங்காணுதல்

**கருத்திட்டத்தின் தலைப்பு:**

"இலங்கையில் தகவலறிந்த ஆதரித்து வாதாடுதலையும் சமூக ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதற்கு குடியியல் வெளியை உருவாக்குதல்"

**முரண்பாட்டு இயக்கவியல்: நீருக்கான குடிமக்களின் உரிமை**

அமைதியைக் கட்டியெழுப்புபவர்களால் அடையாளங்காணப்பட்ட முரண்பாட்டுத் தூண்டுதல்கள்/ முரண்பாட்டுச் சூழ்நிலைகள்

ஜூலை 2023

அமுலாக்கம்: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

ஆதரவு: ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP)

CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.


| | | |
|---|---|---|
| முகவரி | : | 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு-05, இலங்கை |
| தொலைபேசி | : | +94112081384, +94112081385, +94112081386 |
| ஃபக்ஸ் | : | +94112081388 |
| இணையதளம் | : | www.cpalanka.org |
| மின்னஞ்சல் | : | info@cpalanka.org |
| ஃபேஸ் புக் | : | www.facebook.com/cpasl |
| டுவிட்டர் | : | @cpasl |

# அறிமுகம்

பல தசாப்தங்களாக முரண்பாட்டினதும் வன்முறையினதும் விளைவுகளை இலங்கை அனுபவித்துள்ளது, மேலதிகமாகவும் துரதிர்ஷ்டவசமாகவும் சமூக ஒருங்கிணைப்புக்கும் நல்லிணக்கத்திற்கும் சீர்படுத்த முடியாத பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக இத்தகைய அனுபவங்கள் இருந்தபோதிலும், முரண்பாட்டினைத் தடுப்பதற்கான அல்லது எதிர்ப்பதற்கான நடவடிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டும், புறக்கணிக்கப்பட்டும் உள்ளன. நாட்டின் சூழலில் "முரண்பாடு" என்பதன் உணர்பொருள் பெரும்பாலும் இனப்பிரச்சனைக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக பல்வேறு காரணங்கள் அல்லது முரண்பாட்டின் தூண்டுதல்கள் ஆகியன தவிர்க்க முடியாத விதத்தில் கவனிக்கப்படாமல் உள்ளன என்பதுமே இதற்கான பிரதான காரணமாகும்.

இனத்துவப் பதற்றத்தின் காரணமாகவோ அல்லது வேறு விதமாகவோ சமூகத்தின் வெவ்வேறு பிரிவுகளில் தேவைகள், கருத்துக்கள், அபிலாஷைகள், ஆர்வங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியன உட்பட, ஆனால் அவற்றுக்கு மட்டுப்படாமல், ஏதேனும் இணக்கமின்மையிலான முரண்பட்ட சூழ்நிலைகளைத் தூண்டுவதற்கான ஒரு பாரியளவிலான ஆற்றலளவொன்றில் விளைகின்றன. இத்தகைய அலுவல்களின் நிலையொன்று சமூக அமைதியின்மைக்கும், பதட்டங்களுக்கும் மற்றும் சில சமயங்களில் பேரழிவு தரும் சொத்துகளினதும் மற்றும் உயிர்களினதும் இழப்புகளுக்கும் எப்பொழுதும் வழிவகுக்கிறது. எனவே, அதன் பரந்த அர்த்தத்தில், முரண்பாட்டின் தாக்கமானது சந்தேகத்திற்கு இடமின்றி தனிநபர்களினதும், நிறுவனங்களினதும் மற்றும் நாட்டின் பரந்த ஆளுகைக் காட்சிப்பரப்பினதும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் இருக்கலாம். அவ்வாறாக, சமூகத்தில் முரண்பாட்டுத் தூண்டுதல்களுக்கு அதிக இடம் இருந்தால், சமூக ஒற்றுமை, மனித நல்வாழ்வு மற்றும் நாட்டின் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் உறுதித்தன்மை ஆகியவற்றில் தீங்கு விளைவிக்கும் அபாயங்கள் உயர்வாக இருக்கும்.

இந்தப் பின்னணிக்கு எதிராக, "முரண்பாட்டுத் தூண்டுதல்களின்" ஒரு பூரணமற்ற பகுப்பாய்வொன்றையும், விரைவான உண்மையைக் கண்டறியும் செயற்பணியின் மீதான அடிப்படையில் அவற்றின் பரவலையும் மற்றும் இலங்கையில் நீர் தொடர்பில் சாத்தியமான விளைவுகளையும் இந்த வர்ணனை வழங்குகிறது. நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் இருந்து சேகரிக்கப்பட்டு, இலங்கையில் குடிமக்களின் நீர் உரிமை தொடர்பான பிரச்சனைகள் மற்றும் முரண்பாட்டு இயக்கவியல் ஆகியவற்றின் தொழில்நுட்பத் தொகுப்பு மூலம் தற்போதுள்ளதும் மற்றும் தோன்றிவருகின்றதுமான முரண்பாட்டுத் தூண்டுதல்கள் பற்றிய ஆதார அடிப்படையிலான தகவல்களின் அடிப்படையில் இந்தப் பகுப்பாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் ஒன்று

# நீருக்கான உரிமை தொடர்பான முரண்பாட்டு இயக்கவியல்

பேராசிரியர். லரிஃப் சுபைர்

## கண்ணோட்டம்

நீர் வளங்கள், அவற்றின் பற்றாக்குறை, பங்கீடு மற்றும் முகாமைத்துவம் ஆகியன தொடர்பான சிக்கல்கள், நாட்டிற்குள் முரண்பாடுகளுக்கு பங்களிக்கும் அல்லது அதிகப்படுத்தும் நிகழ்வை "இலங்கையில் ஒரு முரண்பாட்டினை தூண்டும் நீர்" குறிக்கிறது. உலகெங்கிலும் உள்ள பல பிராந்தியங்களைப் போலவே, இலங்கையும் அதன் சிக்கலான புவியியல், மாறிவரும் காலநிலைப் பாங்குகள் மற்றும் பல்வேறு சமூக-பொருளாதார நிலைமைகள் ஆகியனவற்றின் காரணமாக, நீர் வளங்களுடன் தொடர்புடைய பல்வேறு சவால்களையும் மற்றும் பதட்டங்களையும் எதிர்கொள்கிறது.

இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகள் உள்ளூர் முதல் தேசிய மட்டங்கள் வரை வெவ்வேறு அளவுகளில் பதட்டங்களையும் மற்றும் சர்ச்சைகளையும் தூண்டும் ஆற்றலைக் கொண்டுள்ளன. நீருக்கான சமமற்ற அணுகல், பொறுப்பற்ற ஆளுகை, வரையறுக்கப்பட்ட வளங்களுக்கான போட்டி, சுற்றுச்சூழல் சீரழிவு, ஊழல் மற்றும் அரசியல்ரீதியாகச் செலுத்தப்பட்ட முடிவெடுத்தல், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் முரண்பட்ட பாரம்பரிய மற்றும் நவீன நீர் முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன உட்பட பல்வேறு காரணிகளால் இந்த முரண்பாடுகள் முளைவிடலாம்.

பல்-பரிமாண சிக்கலொன்றாக, நீர் தொடர்பான முரண்பாடுகள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில், நகரமயமாக்கல், பாரம்பரிய நடைமுறைகள், சட்ட வரைச்சட்டங்கள் மற்றும் ஆளுகைக் கட்டமைப்புகள் ஆகியன உட்பட, அநேகமாக சமூகத்தின் பல்வேறு அம்சங்களுடன் குறுக்கிடுகின்றன. மேலும், மழைப்பொழிவு மற்றும் ஆவியாதல் பாங்குகள் மற்றும் நீரின் கிடைக்கும்தன்மை ஆகியவற்றைப் பாதிக்கும் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்கள், நீர் தொடர்பான முரண்பாடுகளின் இயக்கவியலை மேலும் சிக்கலாக்குகிறது.

"இலங்கையில் முரண்பாட்டினைத் தூண்டுவதற்கு ஒன்றாக நீர்" என்பதைக் கவனத்திற்கெடுப்பதற்கான முயற்சிகள் இந்த காரணிகள் பற்றிய ஒரு நுணுக்கமான புரிதல், பல்-எண்ணிக்கையிலான பயனுரித்தாளர்களின் ஈடுபாடு, பயனுள்ள நீர் முகாமைத்துவக் கொள்கைகளின் அமுலாக்கம் மற்றும் நீர் வளங்களுக்கான சமமான அணுகலை மேம்படுத்துதல் ஆகியனவற்றைச் சம்பந்தப்படுத்துகின்றன. நீர் தொடர்பான முரண்பாடுகளை முன்னெச்சரிக்கையுடன் கவனத்திற்கெடுப்பதன் மூலமும் அத்துடன் நிலையான தீர்வுகளை நோக்கிச் செயல்படுவதன் மூலமும் நீர் பற்றாக்குறையால் எழும் பதட்டங்களுக்கான சாத்தியக்கூறுகளைத் தணித்து, இலங்கை தனது குடிமக்களின் நல்வாழ்விற்கும் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த ஸ்திரத்தன்மைக்கும் பங்களிக்க முடியும்.

## சாத்தியமான முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் நீரின் ஆளுகை மற்றும் பரந்த கரிசனைகள்

நீருக்கான உரிமையானது அடிப்படை மனித உரிமை என்பதுடன், நீரின் சூழலில் சமூக ஒருங்கிணைப்புமாகும் என அமைதியைக் கட்டியெழுப்புபவர்கள் ஊடாகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இதில் பலவிதமான முரண்பாட்டுத் தூண்டுதல்கள், மக்கள்தொகைப் பாங்குகள், சமமற்ற வளப் பங்கீடு, ஆளுகைச் சிக்கல்கள், பாகுபாடு மற்றும் காலநிலை மாறுபாடுகள் ஆகியன உட்பட பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டுள்ளன. "நீரின் உரிமை" தொடர்பான ஒரு சுருக்கமான பகுப்பாய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## குடிநீருக்கான அணுகல்:

தூய்மையானதும் மற்றும் பாதுகாப்பானதுமான குடிநீருக்கான அணுகல் இலங்கையில், குறிப்பாக கிராமிய மற்றும் ஒதுக்கப்பட்ட சனசமூகங்களில் ஓர் அழுத்தமான கரிசனையாக தொடர்ந்துமுள்ளது. நீர் வளங்களின் சீரற்ற பங்கீடு, போதிய உட்கட்டமைப்பின்மை, பாரபட்சமான நிருவாக முடிவுகள், கொள்கை அமுலாக்கமின்மை மற்றும் நீர் தீழ்ப்பு ஆகியவை பாதுகாப்பான குடிநீரைத் தொடர்ச்சியாக அணுகுவதற்கு இடையூறாக உள்ளன. இந்தச் சவால்கள் விகிதாசாரமின்றி, பாதிக்கப்படக்கூடிய மக்களையும், வெவ்வேறு இனக் குழுக்களையும் மற்றும் குறிப்பாக சுகாதார அபாயங்கள்,

சமூக பதட்டங்கள், நீர்வழி நோய்கள் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் திட்டமிடப்படாத அபிவிருத்தித் திட்டங்களால் மக்கள் பாதிக்கப்படும் பகுதிகளையும் பாதிக்கின்றன.

## பயிர்ச்செய்கைக்கு நீர்:

இலங்கையின் பொருளாதாரத்தின் ஆதாரக் கல்லாக விவசாயம் விளங்குவதுடன், உணவுப் பாதுகாப்புக்காக பயிர்ச்செய்கைக்கும் மற்றும் வாழ்வாதாரத்திற்கும் நீர் அத்தியாவசியமாகும். இருப்பினும், மழைப்பொழிவின் ஒழுங்கற்ற பங்கீடு, பொறுப்புகூறப்படாத நீர் முகாமைத்துவ அணுகுமுறைகள், வழக்கொழிந்த நீர்ப்பாசன முறைமைகளுடன் இணைந்த அரசியல்ரீதியிலான செயல்நோக்கத்துடன் குறுகிய-பார்வையுடனான முடிவுகள் மற்றும் காணிப் பயன்பாட்டு நடைமுறைகள் ஆகியன நீர் பற்றாக்குறைக்கும் மற்றும் நீர் முகாமைத்துவத்தில் திறமையின்மைகளுக்கும் வழிவகுக்கின்றன. இது விவசாய உற்பத்தித்திறனைக் குறைத்தலையும், விவசாயிகள் மீதான பொருளாதார நெருக்கடியையும் மற்றும் சனசமூகங்களினதும் மற்றும் பலதரப்பட்ட பயனுரித்தாளர்களினதும் நீர் ஒதுக்கீடு மீது சாத்தியமான முரண்பாடுகளையும் விளைவிக்கின்றது.

## முரண்பாட்டு இயக்கவியல்:

இலங்கையில், சிக்கலான முரண்பாட்டு இயக்கவியலுடன் நீர் உரிமை பின்னிப் பிணைந்துள்ளது. இனத்துவக் குழுக்களுக்கு இடையிலான பதட்டங்கள், வளங்களுக்கான சீரற்ற அணுகல் மற்றும் ஆளுகைச் சவால்கள் ஆகியன ஒரு கொந்தளிப்பான சூழலுக்குப் பங்களித்துள்ளன. நீரின் பற்றாக்குறை மற்றும் நீரின் உரிமைகள் தொடர்பான சர்ச்சைகள் ஆகியன தற்போதுள்ள முரண்பாடுகளை அதிகப்படுத்தி அல்லது புதியவற்றை தூண்டி சமூக ஒருங்கிணைப்பை மேலும் கறைபடுத்தியுள்ளது.

## கொள்கை மற்றும் சட்ட வரைச்சட்டம்:

கொள்கை மற்றும் சட்ட வரைச்சட்டங்கள் ஆகியன மூலம் நீர் தொடர்பான சிக்கல்களை இலங்கை கவனத்திற்கெடுத்துள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மகாவலி அதிகார சபை (MASL) மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவை நீர் முகாமைத்துவத்தில் முக்கிய வகிபங்குகளை ஆற்றுகின்றன. எவ்வாறாயினும், நிருவாகத் திறமையின்மை, ஒருங்கிணைப்பு இல்லாமை, பொறுப்பற்ற நிருவாக முடிவுகள், கொள்கை அமுலாக்கம் மற்றும் வள முகாமைத்துவம் ஆகியவற்றில் அரசியல்ரீதியல் செலுத்தப்படும் பாரபட்சம், அமுலாக்கச் சட்டத்தின் பற்றாக்குறை மற்றும் போதிய வளங்களின்மை ஆகியவற்றின் காரணமாக, இந்தக் கொள்கைகளின் அமுலாக்கம் சவால்களுக்கு முகங்கொடுக்கிறது.

## திட்டமிடப்படாத அபிவிருத்தி:

நுண் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் திட்டமிடப்படாத காடுகளை அகற்றுதல், அர்த்தமுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பை மதிப்பிடாத சிறு நீர் மின் நிலையத் திட்டங்கள் மற்றும் முறையற்ற பயிர்ச்செய்கைகள் அத்துடன் உள்ளூர் கட்டுமானங்கள் இல்லாமல் கூட்டாண்மை நலன்களுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்தல் ஆகியவற்றின் விளைவாக, நீர்ப்பிடிப்புப் பகுதிகள் துரிதமாகக் குறைந்து வருகின்றன. இந்தக் காரணங்களால், ஆறுகளினதும் மற்றும் ஓடைகளினதும் வருடாந்த ஓட்டத்தினால் அல்லது அவற்றின் கொள்ளளவு குறைவதனால் குடிநீருக்கும் மற்றும் விவசாயத்திற்கும் நீர்ப் பற்றாக்குறை பெரும் பிரச்சனையை ஏற்படுத்துகிறது. உயரமான பகுதிகளில் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் அகற்றப்படுவதாலும், மோசமான நீர் மற்றும் மண் பாதுகாப்பு நடைமுறைகளாலும் நீர் மின் உற்பத்தியிலும் மற்றும் நீர்ப்பாசன நீரை வழங்கும் நீர்த்தேக்கங்களிலும் எதிர்பாராத வண்டல் படிவு அபாயத்தை இலங்கை அனுபவித்து வருகிறது.

## பொறுப்பற்ற முடிவுகள் மற்றும் ஊழல்:

மேற்கூறியவை இருந்தபோதிலும், மண், களிமண் அல்லது மணல் அகழ்வாராய்ச்சி மற்றும் ஆறுகள், ஓடைகள் மற்றும் குளங்கள் அத்துடன் நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றுக்கான நில ஒதுக்கீட்டில் சுரங்கமறுத்தல் அதிக அளவில் நீர் வளத்தை மோசமாகப் பாதித்தன. மேலும், நிலத்தை தவறாகப் பயன்படுத்துவதால், பொதுவான பயன்பாட்டுடன் கூடிய நீரூற்றுகள் மற்றும் நீரூற்றுகளின் கொள்ளளவு ஆகியன மோசமடைந்து, படிப்படியாக அழிந்து வருகின்றன. நீர் மூலங்களைக் கொண்ட பகுதிகளின் எல்லைகள், நீர் வழிகள், நீர்த்தேக்கங்களின்ஃகுளங்களின் நீர்ப்பிடிப்புகள் ஆகியவை அடையாளங்காணப்படவில்லை என்பதுடன், தரையில் பௌதீகரீதியாகக் குறிக்கப்படவுமில்லை. முரண்பட்ட சூழ்நிலைகளில் ஈடுபட்டுள்ள தரப்பினரின் அடிப்படையில், கடத்தல்காரர்களுடன் தொடர்புடைய சம்பவங்கள் நியாயமான எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதாகத் தரவுகள் குறிப்பிடுகின்றன.

## ஒருங்கிணைப்பினதும் மற்றும் சீர்திருத்தங்களினதும் பற்றாக்குறை:

சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் ஆட்சியில் மாறி மாறி இருந்த அரசாங்கங்கள் இலங்கையின் நீர் மூலங்களைப் பாதுகாப்பது தொடர்பான பல்வேறு வகையான கொள்கைகளையும் மற்றும் சட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்ளன. தேசிய நீர்ப்பிடி நில முகாமைத்துவம் மீதான கொள்கை, தேசியக் காணி பயன்பாட்டுக் கொள்கை, தேசிய வனக் கொள்கை மற்றும் தேசிய சூழல் கொள்கை ஆகியவை அத்தகைய முக்கிய கொள்கைகளில் சிலவாகும். எவ்வாறாயினும், சிறந்த நீர்-நிருவாகத்தை உறுதி செய்வதற்காக குறைந்த-ஒருங்கிணைக்கப்பட்ட மூலோபாய அணுகுமுறைகளைச் செயல்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்க துண்டிப்புகளுடன் இணைந்து அர்த்தமுள்ள செயல்படுத்தல் இல்லாததால், சமூகப் பதட்டங்களை ஏற்படுத்தும் ஒரு சாத்தியமான முரண்பாட்டிலான தூண்டுதலாக நீர் உள்ளது.

சட்டமியற்றும் மற்றும் கொள்கைச் சீர்திருத்தங்களின் அடிப்படையில், கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ள சட்டங்களின் விதிகள் குடிமகனின் உரிமையாக நீருடன் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ தொடர்புடையவையாக இருக்கின்றன, எனவே, குடிமக்களின் நலன்களைப் பாதுகாக்கிறது, சாத்தியமான முரண்பாடுகளைக் குறைந்தபட்சமாக்குகிறது, நீர் மூலங்களின் பயனுள்ள பயன்பாட்டை மேம்படுத்துகிறது என்பதனால், நன்கு ஒருங்கிணைந்த “நீர் ஆளுகை முறையை” நிறுவுவதையும் அத்துடன் செயல்படுத்துவதையும் உறுதிப்படுத்த ஒரு விரிவான ஆய்வு அவசியமாகும்.

| | | |
|---|---|---|
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் | நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டம் | கமநல அபிவிருத்திச் சட்டம் |
| அரச காணிக் கட்டளைச் சட்டம் | வனவாழ்வுப் பேணல் சட்டம் | நீர் வள அபிவிருத்திச் சட்டம் |
| வனக் கட்டளைச் சட்டம் | நீர் தொடர்பான முரண்பாடுகளைக் குறைந்தபட்சமாக்குவதில் சட்டமன்றச் சீர்திருத்தங்களுக்கு தேவையான சட்டங்களின் மீளாய்வு | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம் |
| மண் பேணல் சட்டம் | பேரிடர் முகாமைத்துவச் சட்டம் | கரையோரப் பேணல் சட்டம் |
| நகர அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம் | காணி சீர்திருத்தச் சட்டம் | மகாவலி அதிகாரச் சபைச் சட்டம் |

# குறிப்பிட்ட முரண்பாட்டு இயக்கவியல் – குடிநீர்

### சிக்கல்கள்:

**அணுகல் மற்றும் ஒப்புரவு:** அவற்றின் புவியியல் அமைவிடத்தை அல்லது சமூக-பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல், சகல குடிமக்களுக்கும் பாதுகாப்பானதும் மற்றும் தூய்மையானதுமான குடிநீருக்கான சமமான அணுகலை உறுதி செய்வது குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது. நீர் வள முகாமைத்துவ ஆளுகையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஓரங்கட்டப்பட்ட சனசமூகங்கள் முகங்கொடுக்கின்றன.

**நீரின் தரம்:** நீரின் மூலம் பரவும் நோய்களையும் மற்றும் ஏனைய உடல்நல அபாயங்களையும் தடுப்பதற்கு குடிநீர் மூலங்களின் தரத்தைப் பராமரிப்பது மிகவும் முக்கியமானதாகும். மாசுபாடு, தீழ்ப்பு மற்றும் முறையான பரிகரிப்பு ஆகியன தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதும் அவசியமாகும்.

**உட்கட்டமைப்பின் மேம்பாடு:** நகர மற்றும் கிராமியப் பகுதிகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதும் அத்துடன் பராமரிப்பதும் ஒரு கொள்கைச் சவாலாக உள்ளது. இது தோதான நீர் பரிகரிப்பு வசதிகள், விநியோக வலைப்பின்னல்கள் மற்றும் களஞ்சிய முறைமைகள் ஆகியனவற்றை உறுதி செய்வதை உள்ளடக்குகிறது.

**காலநிலை மாற்றம்:** மழைப்பொழிவுப் பாங்குகளை மாற்றுதல், அதிகரிக்கும் ஆவியாதல் மற்றும் நீரின் தேவை உட்பட தீவிர வானிலை நிகழ்வுகள் ஆகியன நீர் கிடைக்கும்தன்மையைப் பாதிக்கின்றன. இந்தச் சவால்களை நிருவகிப்பதற்கு, உத்திகளை உருவாக்குவதும் அத்துடன் நீர் வளங்கள் மீது காலநிலை மாற்றத்தின் தாக்கத்திற்கு அனுசரிப்பதும் முக்கியமானதாகும்.

### சவால்கள்:

**நகரமயமாக்கல்:** துரிதமான நகரமயமாக்கல் தற்போதுள்ள நீர் உட்கட்டமைப்பை நலிவடையச் செய்ய முடியும் என்பதுடன், நகரப் பகுதிகளில் தூய்மையான குடிநீருக்கான தேவையை அதிகரிப்பதற்கும் வழிநடத்தும். கிராமியப் பகுதிகளின் தேவைகளைப் பராமரிக்கின்ற அதே வேளை, வளர்ந்து வரும் நகரங்களுக்கு போதுமான நீர் விநியோகத்தை உறுதி செய்வது சவாலானதொன்றாகும்.

**நீர் மாசுபாடு:** விவசாய வழிந்தோடல்களிலிருந்தும், கைத்தொழில் வெளியேற்றங்களிலிருந்தும் மற்றும் போதியதற்ற சுகாதார வசதிகளிலிருந்தும் வெளியேறும் தீழ்ப்பானது நீர் மூலங்களை மாசுபடுத்துவதுடன், குடிப்பதற்கு அவற்றின் பொருத்தத்தன்மையையும் பாதிக்கிறது.

**சுகாதாரம் மற்றும் உடல்நலம்:** சுகாதார மற்றும் உடல்நல நடைமுறைகளை மேம்படுத்துவது பாதுகாப்பான குடிநீருக்கான அணுகலை உறுதி செய்வதுடன் நெருக்கமாகவும் இணைக்கப்பட்டுள்ளது. ஒரு முறையான சுகாதார வசதிகளின் பற்றாக்குறையானது நீர் மூலங்கள் மாசுபடுவதற்கு வழிவகுக்கும்.

**விவசாய நடைமுறைகள்:** விவசாயத்தில் திறமையற்ற நீரின் பயன்பாடு மற்றும் விவசாய இரசாயனங்களின் முறையற்ற பயன்பாடு ஆகியவை நீரின் தீழ்ப்புக்கு வழிவகுக்கும் என்பதுடன், பாவனைக்கு தூய்மையான நீரின் கிடைக்கும்தன்மையையும் குறைக்கின்றது.

# குறிப்பிட்ட முரண்பாட்டு இயக்கவியல் – பயிர்ச்செய்கைக்கான நீர்

### சிக்கல்கள்:

**நீரின் ஒதுக்கீடு:** உள்நாட்டு மற்றும் கைத்தொழில் பயன்பாடு போன்ற ஏனைய துறைகளுடன் விவசாயப் பயன்பாட்டிற்கான நீர் ஒதுக்கீட்டைச் சமநிலைப்படுத்த, ஒப்புரவிலான பங்கீட்டை உறுதி செய்வதற்கான தெளிவான கொள்கைகளும் மற்றும் வழிமுறைகளும் தேவைப்படுகின்றன.

**திறமையான நீரின் பயன்பாடு:** இந்த விலைமதிப்பற்ற வளத்தைப் பாதுகாப்பதற்கு விவசாயத்தில் திறமையான நீர் பயன்பாட்டை ஊக்குவிப்பது முக்கியமானதாகும். ஏனெனில் இது கிடைக்கக்கூடிய நீரில் அதிகளவு பங்கை

எடுத்துக்கொள்கிறது. நீர் சேமிப்புத் தொழில்நுட்பங்கள், பயிர் தெரிவு மற்றும் நீர்ப்பாசன நடைமுறைகள் ஆகியனவற்றை கொள்கைகள் ஊக்குவிக்க வேண்டும்.

**காலநிலை மாற்றம்:** விவசாயத்திற்கான நீரின் கிடைக்கும்தன்மையை மாற்றமடையும் காலநிலைப் பாங்குகளும் மற்றும் வண்டல்படிவில் அதிகரிக்கும் மாறுபாடும் பாதிக்கின்றன. காலநிலை மாற்றத்தின் விளைவுகளைச் சமாளிப்பதற்கு அனுசரிப்பு நடவடிக்கைககளை வள முகாமைத்துவக் கொள்கைகள் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

**நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல்:** நீர் வளங்களை அதிகமாகச் சுரண்டுவதைத் தடுக்கவும் அத்துடன் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணவும் நில பயன்பாட்டுத் திட்டமிடலுடன் நீர் வள முகாமைத்துவத்தை ஒருங்கிணைப்பது மிகவும் முக்கியமானதாகும்.

## சவால்கள்:

**நீரின் பற்றாக்குறை:** குறிப்பாக வறண்ட காலங்களில், நீரின் பற்றாக்குறைக்கு இலங்கையின் சில பிராந்தியங்கள் முகங்கொடுக்கின்றன. நீரின் பற்றாக்குறையை நிருவகிப்பதும் மற்றும் விவசாயத்திற்கு போதுமான விநியோகத்தை உறுதி செய்வதும் குறிப்பிடத்தக்க சவாலாக உள்ளது.

**வழக்கொழிந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பு:** சில நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் உட்கட்டமைப்புகள் ஆகியன வழக்கொழிந்ததாகவோ அல்லது திறமையற்றதாகவோ இருக்கலாம். இது நீர் வீணாவதற்கு இட்டுச்செல்கின்றது. நிதிப்படுத்தல் மற்றும் ஏற்பாட்டியல் கட்டுப்பாடுகளின் காரணமாக, இந்த முறைமைகளை மேம்படுத்துவதும் அத்துடன் நவீனப்படுத்துவதும் சவாலானதாக இருக்கலாம்.

**நீரின் தீழ்ப்பு:** விவசாய வழிந்தோடல்களிலிருந்து தீழ்ப்பு, உரங்களினதும் மற்றும் பூச்சிக்கொல்லிகளினதும் மிதமிஞ்சிய பயன்பாடு மற்றும் மோசமான கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன நீர் மூலங்களை மாசுபடுத்தி, சூழல் முறைமைகளுக்கு தீங்கு விளைவிக்கும்.

**பயிரின் தெரிவு மற்றும் நீரின் தேவை:** சில பயிர்களுக்கு ஏனையவற்றை விட அதிகளவு நீர் தேவைப்படுகிறது. நிலையான விவசாயத்தில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களுக்கும் மற்றும் நீர் கிடைக்கும் தன்மைக்கும் இடையே சமநிலையை உறுதி செய்வது முக்கியமாகும்.

**இயற்கைக்கும் மற்றும் மக்களுக்கும் நீர்:** தற்போது, நீர் முகாமைத்துவத்தில் நீர் மின்சாரத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதுடன், அதைத் தொடர்ந்தே விவசாயத்துக்கு நீர் வழங்கப்படுகிறது. இதன் விளைவாக, இயற்கை மூலங்களில் இருந்து மக்களின் நீர் தேவைகளைக் கவனிப்பதில் பற்றாக்குறை உள்ளதுடன், வனவாழ்வும் மற்றும் சூழல் முறைமைகளும் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. மின்னேரியா, கிரிதலே மற்றும் கவுடுல்ல ஆகிய குளத்தொகுதியில் ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் வர்த்தக இறால் வளர்ப்புக்கும் மற்றும் யானைத் தேவைகளுக்கும் கவனமெடுப்பின் பற்றாக்குறைக்கும் பல்வேறு கடலேரிகளில் என்ன நடக்கிறது என அவதானிப்போம்.

| முரண்பாட்டு இயக்கவியல் | |
|---|---|
| நீரின் ஆளுகை மற்றும் முகாமைத்துவம் | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| துண்டு துண்டான முடிவெடுப்பதற்கும் மற்றும் திறமையற்ற வள ஒதுக்கீட்டிற்கும் பல்-எண்ணிக்கையிலான முகவர்களையும் மற்றும் துறைகளைகளையும் இலங்கையில் நீர் வளங்களின் ஆளுகையும் மற்றும் முகாமைத்துவமும் சம்பந்தப்படுத்துகின்றன. | ஒருங்கிணைப்பு இல்லாததால், நீர் மூலங்களின் சமமற்ற பங்கீடு விளைவதுடன், இது ஏனையவற்றுக்கு மேலாக, சில பிராந்தியங்களுக்கு அல்லது துறைகளுக்கு சாதகமாக இருப்பதுடன், குடிமக்களுக்கு நீருக்கான ஒப்புரவிலான தடையாகவுமுள்ளது. |
| ஒப்புரவு மற்றும் அணுகல் | |
| பிரச்சனை: | தாக்கம்: |

| | |
|---|---|
| தூய்மையானதும் மற்றும் பாதுகாப்பானதுமான குடிநீருக்கான அணுகல் இலங்கை முழுவதும் சமமற்றதாக உள்ளதுடன், இது கிராமிய மற்றும் ஒதுக்கப்பட்ட சனசமூகங்களை விகிதாசாரமற்றதாகப் பாதிக்கிறது. | பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு தூய்மையான நீருக்கான அடிப்படை உரிமை மறுக்கப்படுவதால் சமூக ஏற்றத்தாழ்வுகள் எழுவதுடன், இது சுகாதாரச் சிக்கல்களுக்கு வழிவகுக்கின்றது மற்றும் ஏற்றத்தாழ்வுகளை வலுப்படுத்துகிறது. |
| **சட்ட வரைச்சட்டம்** | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஒன்றின் மேல் ஒன்று படிவதுடன், சில நேரங்களில் முரண்படுகின்றன என்பதனால், நீர் வளங்களை ஆளும் சட்ட வரைச்சட்டம் சிக்கலானதாகும். | குழப்பத்தையும் மற்றும் சட்ட ஓட்டைகளையும் தவிர்த்து, நீர் உரிமைகளைத் திறம்பட அமுல்படுத்துவதற்கும் அத்துடன் வினைப்படுத்துவதற்கும் சட்ட ஏற்பாடுகளில் தெளிவும் மற்றும் நிலைத்தன்மையும் அவசியமாகும். |
| **உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள்** | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| போதிய உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள் இன்மையானது, குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் தூய்மையான குடிநீரை வழங்குவதில் தடையாக உள்ளது. | நீரின் மூலம் பரவும் நோய்களை மோசமான உட்கட்டமைப்பு அதிகரிப்பதுடன், பொது சுகாதார முயற்சிகளை மதிப்புக் குறைத்து, குடிமக்களின் நல்வாழ்வையும் பாதிக்கிறது. |
| | |
| **தீழ்ப்பு மற்றும் மாசுபாடு** | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| தொழிற்சாலை வெளியேற்றங்கள், விவசாய வழிந்தோடல்கள் மற்றும் போதிய சுகாதாரமின்மை ஆகியவற்றின் காரணமாக, தீழ்ப்பிலிருந்து இலங்கையில் உள்ள நீர்நிலைகள் பாதிப்படைகின்றன. | நீர் தீழ்ப்பானது பாதுகாப்பற்ற குடிநீருக்கு வழிவகுக்கிறது, பொது சுகாதாரத்திற்கும் மற்றும் சூழல் முறைமைகளுக்கும் தீங்கு விளைவிக்கிறது, அத்துடன் நீர் பரிகரிப்புக்கான முதலீடுகளையும் அவசியப்படுத்துகின்றது. |
| **விவசாய நீரின் பயன்பாடு** | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| வழக்கொழிந்த நீர்ப்பாசன முறைமைகள் அத்துடன் சீரற்ற நீர் வழங்கல் மற்றும் நிலப் பயன்பாட்டு நடைமுறைகள் ஆகியன பயிர்ச்செய்கைக்கான நீர் பற்றாக்குறைக்கு பங்களிக்கின்றன. | ஒரு முக்கிய துறையான விவசாயத்தின் உற்பத்தித்திறன் குறைகிறது, விவசாயிகள் மீதான பொருளாதார நெருக்கடியையும் மற்றும் நீர் பங்கீட்டில் சாத்தியமான முரண்பாடுகளையும் எதிர்கொள்கிறது. |
| **காலநிலை மாற்ற மீளும்தன்மை** | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| மாற்றமடையும் வீழ்படிவு முறைமைகள் மற்றும் காலநிலை தாக்கங்கள் ஆகியன நீரின் கிட்டுந்தன்மையை அச்சுறுத்துகின்றன. | காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்காக நீர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு, குறிப்பாக தட்டுப்பாடான காலங்களில், நீர் அணுகலுக்கும் மற்றும் விநியோகத்திற்கும் உத்தரவாதம் அளிக்கும் இசைவாக்கத்திலான உத்திகள் தேவையாகும். |
| **சனசமூக ஈடுபாடு** | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| நீர் முகாமைத்துவ முடிவுகளில் வரையறுக்கப்பட்ட குடிமக்கள் பங்கேற்பு மற்றும் சமூக ஈடுபாடு. | முடிவெடுப்பதில் இருந்து குடிமக்களை விலக்குவது குறைகளுக்கு வழிவகுக்கும், நிலையான நீர் முகாமைத்துவத்திற்கு இடையூறு விளைவிக்கும் அத்துடன் முரண்பாடுகளை நிரந்தரமாக்குகிறது. |

| சட்ட விழிப்புணர்வு | |
|---|---|
| பிரச்சனை: | தாக்கம்: |
| நீர் தொடர்பான சிக்கல்களைக் கவனத்திற்கெடுப்பதற்கு தங்களின் நீர் உரிமைகள் மற்றும் சட்ட வழிவகைகள் ஆகியன பற்றி குடிமக்கள் மத்தியில் வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வு. | குடிமக்கள் தமக்கு என்ன உரிமை இருக்கிறது என்று தெரியாமல் இருக்கலாம், இது அவர்களின் உரிமைகளுக்காக எழுந்து சட்டரீதியான தீர்வுகளைத் அணுகும் திறனைத் தடுக்கலாம். |
| வினைப்படுத்தல் மற்றும் இணக்கம் | |
| பிரச்சனை: | தாக்கம்: |
| நீர் தொடர்பான சட்டங்களினதும் மற்றும் ஒழுங்குவிதிகளினதும் முரணான வினைப்படுத்தல். | இணக்கமின்மைக்கு பலவீனமான வினைப்படுத்தல் வழிவகுக்கலாம், நிலைத்திருக்காத நடைமுறைகள் தொடர்ந்தும் நிலவ அனுமதிக்கிறது அத்துடன் நீர் தொடர்பான சவால்களையும் அதிகரிக்கின்றது. |

இலங்கையில் உள்ள குடிமக்களின் நீர் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு இந்தச் சட்ட மற்றும் அரசியல் சவால்களைக் கவனத்திற்கெடுப்பது மிகவும் முக்கியமானதாகும். சகல குடிமக்களுக்கும் தூய்மையான குடிநீரையும் மற்றும் பயிர்ச்செய்கைக்கான நீரையும் பெறுவதற்கு நீர் ஆளுகையில் விரிவான சீர்திருத்தங்கள், ஒப்புரவிலான பங்கீடு, தீழ்ப்புக் கட்டுப்பாடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் காலநிலை மீளும்தன்மை ஆகியன அத்தியாவசியமாகும். இந்தக் கலப்பிலான சிக்கல்களையும் மற்றும் முரண்பட்ட சூழ்நிலைகளையும் சமாளிப்பதற்கும் அத்துடன் நாட்டில் நிலையான நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கும் மற்றும் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும் அரசு நிறுவனங்களையும், சிவில் சமூகத்தையும் மற்றும் சனசமூகங்களையும் உள்ளடக்கிய வெளிப்படையானதும், ஒருங்கிணைந்ததும் மற்றும் உள்ளடக்கியதுமான ஓர் அணுகுமுறை அவசியமாகும்.

அத்தியாயம் இரண்டு

# அமைதியைக் கட்டியெழுப்புவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் மீதான அடிப்படையில் பகுப்பாய்வு

இந்தப் பகுதி நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து அமைதியைக் கட்டியெழுப்புவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் சுருக்கமான பகுப்பாய்வை வழங்குகிறது. 2023 ஜூலை மாதத்தில் இரு வாரங்களுக்குள் தரவின் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

## முரண்பாடு தொடர்பான சிக்கல்களின் பரவல்: மாவட்டங்கள் வாரியாக

நீர் வள முகாமைத்துவம் மற்றும் அணுகல் ஆகியவற்றில் சில பகுதிகள் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்வதுடன், இலங்கையில் உள்ள சகல மாவட்டங்களில் உள்ள பல்வேறு மட்டங்களிலான நீர் தொடர்பான முரண்பாடுகளையும் தரவு முனைவுபடுத்துகிறது. நீர் தொடர்பான முரண்பாடுகளைக் கவனத்திற்கெடுப்பதற்கும், நிலையான நீர் முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் அத்துடன் பிராந்தியத்தில் அமைதிக்கும் மற்றும் மேம்பாட்டிற்கும் பங்களிப்பதற்கும் இலக்கிடப்பட்ட உத்திகளை உருவாக்குவதில் கொள்கை வகுப்போர்களுக்கும் மற்றும் பயனுரித்தாளர்களுக்கும் இந்தத் தகவல் வழிகாட்டும்.

**அதிக நீர் தொடர்பான முரண்பாடுகள்:** நீர் சிக்கல்கள் தொடர்பான அதிக எண்ணிக்கையிலான முரண்பாடுகளைப் பெருமளவு மாவட்டங்கள் கொண்டிருக்கின்றன. இதில் மட்டக்களப்பு (16 சம்பவங்கள்), இரத்தினபுரி (15 சம்பவங்கள்), நுவரெலியா (14 சம்பவங்கள்), காலி (7 சம்பவங்கள்) மற்றும் அனுராதபுரம் (10 சம்பவங்கள்) ஆகியவை அடங்கும். முரண்பாடுகளில் விளைகின்ற நீர் வள முகாமைத்துவம், ஒதுக்கீடு அல்லது அணுகல் ஆகியன தொடர்பான கணிசமான சவால்களை இந்த மாவட்டங்கள் எதிர்கொள்வதாக தரவு வலியுறுத்துகிறது.

**பிராந்தியப் பாங்குகள்:** ஒரே பிராந்தியத்தில் உள்ள சில மாவட்டங்களில் நீர் தொடர்பான முரண்பாடுகள் ஒரே மாதிரியாக இருப்பது போல் தெரிகிறது. உதாரணமாக, வட மத்திய மாகாணத்தில் உள்ள அனுராதபுரம் மற்றும் வட மாகாணத்தில் உள்ள மன்னார் ஆகிய இரண்டும் முறையே 10 மற்றும் 10 முரண்பாடுகளைக் கொண்டுள்ளன.

**வள ஒதுக்கீடு:** ஒப்புரவிலான வள ஒதுக்கீடு மற்றும் பயனுள்ள நீர் முகாமைத்துவக் கொள்கைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை தரவு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அதிக முரண்பாடுகள் உள்ள மாவட்டங்களுக்கு உட்கட்டமைப்பின் மேம்பாடு, நீரின் பங்கீடு மற்றும் முரண்பாட்டினைத் தீர்க்கும் பொறிமுறைகள் ஆகியன உட்பட நீர் தொடர்பான சிக்கல்களைக் கவனத்திற்கெடுப்பதற்கு அதிகளவு கவனமும் மற்றும் வளங்களும் தேவைப்படலாம்.

**நிலைத்திருக்கும்தன்மை மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புதல்:** சுற்றுச்சூழல் நிலைத்திருக்கும்தன்மை மற்றும் அமைதியைக் கட்டியெழுப்பும் முயற்சிகள் ஆகிய இரண்டிற்கும் நீர் தொடர்பான முரண்பாடுகளைத் தீர்ப்பது முக்கியமானதாகும். நீர் பற்றாக்குறை மற்றும் நீர் வளங்கள் மீதான சர்ச்சைகள் ஆகியன தற்போதுள்ள பதட்டங்களை அதிகப்படுத்துவதுடன், அபிவிருத்திக்கு இடையூறாகவும் உள்ளன.

## குறிப்பிட்ட நீர்ச் சிக்கல்களினதும் மற்றும் அமைதியைக் கட்டியெழுப்புவரால் அடையாளங்காணப்பட்ட முரண்பாட்டுச் சம்பவங்களினதும் எண்ணிக்கை:

இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகள் பன்முகத்தன்மை கொண்டவை என்பதுடன், அவை சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகியன உட்பட சமூகத்தின் பல்வேறு அம்சங்களைப் பாதிக்கின்றன என்பதை தரவு சித்தரிக்கிறது. இந்த முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு, பல்-எண்ணிக்கையிலான பயனுரித்தாளர்கள், நிலைத்திருக்கத்தக்க காணி மற்றும் நீர் முகாமைத்துவ நடைமுறைகள், ஒப்புரவிலான கொள்கைகள் மற்றும் அரசாங்கப் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான அணுகுமுறை தேவைப்படும். தூய்மையான குடிநீருக்கான அணுகலை உறுதிசெய்தல் மற்றும் பயனுள்ள நீர் வள முகாமைத்துவம் ஆகியவை இந்த முரண்பாடுகளைத் தணிப்பதற்கும், மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் முக்கியமான படிகளாகும்.

**பலதரப்பட்ட நீர்ச் சிக்கல்கள்:** நீர் தொடர்பான பல்வேறு சிக்கல்களை இலங்கை எதிர்கொள்கிறது என்றும், முரண்பாட்டுச் சம்பவங்களுக்கு ஒவ்வொன்றும் பங்களிக்கின்றது என்றும் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்தப் பிரச்சனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: சிறிய நீர்மின் நிலையங்களால் நீர் மூலங்களுக்குச் சேதம், நீர் அணுகலைப் பாதிக்கும் இராணுவமயமாக்கல், பயிர்ச்செய்கைக்குப் போதுமான நீர் விநியோகக் கொள்கைகள், தூய்மையான குடிநீரின் பற்றாக்குறை, நீர் வளங்களின் துஷ்பிரயோகம், குடிநீர் மாசுபடுதல், நீர் பங்கீட்டில் பாகுபாடு, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் காடழிப்பு, நீர் வசதிகளற்ற காணிகளைக் கையகப்படுத்தல், காணி விற்பனையினாலும் மற்றும் பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கையினாலும் நீர் மூலங்கள் குறைவடைதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக வெள்ளம், அரசுத் திணைக்களங்களின் தன்னிச்சையான நடவடிக்கைகள் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நகர்ப்புற குடும்பங்களுக்கான அதிகரிக்கின்ற நீர் கட்டணம்.

**பல்-எண்ணிக்கையிலான பயனுரித்தாளர்கள்:** அரசாங்க முகவராண்மைகள், தனியார் நிறுவனங்கள், சனசமூகங்கள் மற்றும் தனிநபர்கள் உட்பட பல்வேறு பயனுரித்தாளர்களை இந்த நீர் தொடர்பான முரண்பாடுகள் சம்பந்தப்படுத்துகின்றன. இந்த முரண்பாடுகளைக் கவனத்திற்கெடுப்பதற்கு இந்தப் பயனுரித்தாளர்களிடையே கூட்டுமுயற்சியும் மற்றும் ஒருங்கிணைப்பும் தேவைப்படும்.

**மூலவளம் குறைவடைதல்:** பாரிய அளவிலான பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகியன உட்பட, நிலைத்திருக்காத காணி பயன்பாட்டு நடைமுறைகளுக்கு நிலத்தடி நீர் மூலங்கள் குறைவடைதல் மற்றும் நீர் மூலங்களுக்கு சேதம் போன்ற பெருமளவு சிக்கல்கள் தொடர்புடையவையாகும்.

**சமூக மற்றும் சுகாதாரத் தாக்கம்:** மாசடைந்த குடிநீரின் காரணமாக, தூய்மையான குடிநீருக்குப் பற்றாக்குறை மற்றும் உடல்நலப் பிரச்சனைகள் போன்ற சிக்கல்கள் முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் பொது சுகாதாரத்தினதும் மற்றும் நல்வாழ்வினதும் மீது நேரடியான தாக்கமொன்றைக் கொண்டிருக்கும்.

**ஒப்புரவு மற்றும் பாகுபாடு:** இனத்தின் அல்லது மதத்தின் அடிப்படையில் நீர் விநியோகத்தில் பாரபட்சமான நடைமுறைகள் முரண்பாட்டின் மூலங்களாக அடையாளங்காணப்படுகின்றன. சமூக ஒருங்கிணைப்புக்கும் மற்றும் அமைதிக்கும் நீர் மூலங்களுக்கு சமமான அணுகலை உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும்.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு:** சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் இல்லாததால், வெள்ளத்தால் ஏற்படும் சேதமானது நீர் தொடர்பான முரண்பாடுகளைத் தணிக்க நிலைத்திருக்கத்தக்க சுற்றுச்சூழல் கொள்கைகளினதும் மற்றும் நடைமுறைகளினதும் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

**அரசாங்கத்தின் வகிபங்கு:** அரசாங்க நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகள் மற்றும் நீர் கட்டண உயர்வு போன்ற பல சிக்கல்கள், நீர் மூலங்களை நிருவகித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் ஆகியவற்றில் அரசாங்க நிறுவனங்களின் வகிபங்கைச் சுட்டிக்காட்டுகின்றன.

**பயிர்ச்செய்கைச் சவால்கள்:** பயிர்ச்செய்கைக்கு போதுமானதற்ற நீர் மற்றும் பயிர்ச்செய்கைக்கு நியாயமான நீர் முகாமைத்துவத்தின் பற்றாக்குறை ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்க சிக்கல்கள்களாகும் என்பதுடன், உணவுப் பாதுகாப்பையும் மற்றும் வாழ்வாதாரத்தையும் உறுதிப்படுத்த விவசாய நீர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தையும் முனைவுபடுத்துகின்றன.

**குடிநீருக்கான அணுகல்:** மிகவும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முரண்பாட்டுச் சம்பவங்கள் குடிநீர் வசதியின் பற்றாக்குறையுடன் தொடர்புடையவையாகும். மக்கள்தொகையில் பெரும் பகுதியை இந்தச் சிக்கல் பாதிப்பதுடன், அனைவருக்கும் பாதுகாப்பானதும் மற்றும் தூய்மையானதுமான குடிநீரை அணுகுவதற்கு உடனடியான கவனத்தையும் வேண்டுகிறது.

## முரண்பட்ட சூழ்நிலைகளுடன் தொடர்புடைய அரசு நிறுவனங்கள்:

இலங்கையில் நீர் வளங்களை நிருவகிப்பதில் உள்ள சிக்கலானதன்மையை நீர் தொடர்பான முரண்பாடுகளில் பல்வேறு அரச நிறுவனங்களின் சம்பந்தம் முனைவுபடுத்துகிறது. இந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும், நிலையான நீர் முகாமைத்துவ நடைமுறைகளை உறுதி செய்வதற்கும் பயனுள்ள ஒருங்கிணைப்பு, தெளிவான கொள்கைகள் மற்றும் வெளிப்படையான ஆளுகை ஆகியன அவசியமாகும்.

**பன்னிலையிலான அரசாங்கப் பயனுரித்தாளர்கள்:** இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகளில் பரந்த அளவிலான

அரசாங்க நிறுவனங்களின் ஈடுபாட்டை தரவு முனைவுபடுத்துகிறது. சுகாதாரத் துறை வசதிகள், ஒழுங்குமுறை உறுப்புக்கள், சூழல் முகாவராண்மைகள், உள்ளூராட்சி மன்றங்கள், விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்கள் மற்றும் அதிகமானவற்றை இந்த நிறுவனங்கள் உள்ளடக்குகின்றன.

**முக்கிய நிறுவனங்கள்:** அதிக எண்ணிக்கையிலான முரண்பாட்டுச் சம்பவங்களை சில அரசு முகவராண்மைகள் கொண்டுள்ளன. அதன் செயற்பாடுகளுடன் தொடர்புடைய 21 முரண்பாட்டுச் சம்பவங்களுடன் நீர்ப்பாசனத் திணைக்களம் அடிக்கடி குறிப்பிடப்படுகின்றது. நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் 36 சம்பவங்களுடன் முரண்பாடுகளில் குறிப்பிடத்தக்க விதத்தில் சம்பந்தப்பட்டுள்ளது. நீர் முகாமைத்துவத்தில் இந்த நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும், முரண்பாடுகளை இன்னும் திறம்பட எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம் எனவும் இந்த எண்ணிக்கைகள் சுட்டிச்சொல்கின்றன.

**வள முகாமைத்துவம்:** விவசாயத் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் போன்ற முகவராண்மைகள் முறையே 4 மற்றும் 5 சம்பவங்களுடன், பயிர்ச்செய்கை மற்றும் காடழிப்பு போன்ற காணிப் பயன்பாடு மற்றும் வள முகாமைத்துவ நடைமுறைகள் ஆகியன தொடர்பான முரண்பாடுகளுடன் தொடர்புடையவையாகும். இந்த முரண்பாடுகள் பெரும்பாலும் நீர் வளங்கள் தொடர்பான தகராறுகளைச் சம்பந்தப்படுத்துகின்றன.

**உள்ளூராட்சி நிருவாகம்:** உள்ளூராட்சி மன்றங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் பிரதேசச் செயலக அலுவலகங்கள் முறையே 5 மற்றும் 16 சம்பவங்களுடன், பல முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்ஃ ஈடுபட்டுள்ளன. இது விசேடமாக, சனசமூக மட்டத்தில் நீர் தொடர்பான சிக்கல்களைக் கவனத்திற்கெடுப்பதில் உள்ளூராட்சி ஆளுகையின் முக்கியத்துவத்தை முனைவுபடுத்துகிறது.

## முரண்பாடுகளில் பாதுகாப்புப் படைகளின் சம்பந்தம்:

நீர் தொடர்பான சிக்கல்கள் தொடர்பாக மொத்தம் 12 முரண்பாட்டுச் சம்பவங்களில் இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸ் உட்பட பாதுகாப்புப் படைகள் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

பாதுகாப்புப் படைகளின் மத்தியில், அறிக்கையிடப்பட்ட ஆகக்கூடுதலான எண்ணிக்கையிலான சம்பவங்களை (6) பொலிஸ் கொண்டுள்ளதுடன், அதை இராணுவமும் (5) மற்றும் கடற்படையும் (1) தொடர்கினறன.

## முரண்பாடுகளில் ஏனைய தரப்புக்களின் சம்பந்தம்:

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், கடத்தல்காரர்கள், அரசியல் துணை நிறுவனங்கள், மதத் தலைவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகள் உட்பட இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள பலதரப்பட்ட செயற்பாட்டாளர்களை தரவு எடுத்துக்காட்டுகிறது. பொருளாதார நலன்கள், சட்டவிரோத நடவடிக்கைகள், அரசியல் தொடர்புகள் மற்றும் சுற்றுச்சூழல் கரிசனைகள் ஆகியவற்றிலிருந்து இந்த முரண்பாடுகள் எழலாம்.

- ➔ 10 அறிக்கையிடப்பட்ட சம்பவங்களுடன் உள்நாட்டு நிறுவனங்களும் மற்றும் உள்ளூர் வர்த்தகர்களும் நீர் தொடர்பான முரண்பாடுகளில் அடிக்கடி ஈடுபடுகின்றன/ஈடுபடுகின்றனர். காணி அபிவிருத்தி, சுரங்கமறுத்தல் அல்லது விவசாயம் போன்ற நிகழத்தக்கரீதியில் தொடர்பான செயல்பாடுகளுடன் இந்த முரண்பாடுகளில் ஒரு குறிப்பிடத்தக்க வகிபங்கைப் பொருளாதார நலன்களும் மற்றும் செயல்பாடுகளும் கொண்டுள்ளன என்று இது சுட்டிச்சொல்கிறது.
- ➔ மணல் அகழ்வு, மண் அகழ்வு, மரம் பிரித்தெடுப்பு மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் போன்ற சட்டவிரோத வியாபாரங்களில் ஈடுபடும் கடத்தல்காரர்கள் நீர் தொடர்பான முரண்பாடுகளில் குறிப்பிடத்தக்க காரணிகளாக உள்ளதுடன், இது குறித்து 10 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.
- ➔ அரசியல்வாதிகளின் நெருங்கிய கூட்டாளிகள் மற்றும் ஆதரவாளர்கள் ஆகியோர் 11 முரண்பாட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்பதுடன், இது நீர் மூலங்கள் தொடர்பான முரண்பாடுகளுக்கு அரசியல் தொடர்புகள் அல்லது செல்வாக்கு ஆகியன பங்களிக்கக்கூடும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- ➔ மதத் தலைவர்கள் 3 முரண்பாட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள போதிலும், அவர்களின் ஈடுபாட்டின் தன்மை குறித்து தரவுகளில் குறிப்பிடப்படவில்லை. இந்த முரண்பாடுகளில் அவர்களின் வகிபங்கைப் புரிந்துகொள்ள மேலதிக விவரங்கள் தேவைப்படுகின்றன.

➔ சுற்றுச்சூழல் அமைப்புகள் 8 முரண்பாட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளன. இது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஆதரித்து வாதாடுவதிலும் மற்றும் நீர் வள முகாமைத்துவம் தொடர்பான சிக்கல்களை சாத்தியமான விதத்தில் கவனத்திற்கெடுப்பதிலும் அவற்றின் ஈடுபாட்டைச் சுட்டிச்சொல்கின்றது.

## வெவ்வேறு இனத்துவக் குழுக்களுக்கு இடையிலான முரண்பாடுகளிலான சூழ்நிலைகள்:

சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய சனசமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் குறிப்பிடத்தக்கதாக உள்ள அதே வேளை, இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் மற்றும் ஏனைய இனக்குழுக்கள் சம்பந்தப்பட்ட முரண்பாடுகள் ஆகியவையும் நாட்டில் நீர் உரிமை முரண்பாடுகளின் சிக்கலான காட்சிப்பரப்புக்கு பங்களிக்கின்றன.

➔ நீர் உரிமைகள் தொடர்பான முரண்பாடுகள் சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழ்ச் சனசமூகங்கள் உட்பட பல்வேறு இனக்குழுக்களுக்கு இடையிலான ஊடாட்டங்களை சம்பந்தப்படுத்தியுள்ளதாகத் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

➔ சிங்களம்-சிங்களம் முரண்பாடுகளின் 19 சம்பவங்களுடன், சிங்கள இனத்துவக் குழுவிற்குள் ஊடாட்டங்களை அடிக்கடி நிகழும் முரண்பாடுகள் சம்பந்தப்படுத்துகின்றன. இது நீர் உரிமைகள் தொடர்பான இனங்களுக்குள்ளேயான முரண்பாடுகள் ஒப்பீட்டளவில் பொதுவானவை என்பதைச் சுட்டிச்சொல்கிறது.

➔ சிங்கள மற்றும் தமிழ் இனக்குழுக்களுக்கு இடையிலான ஊடாட்டங்கள் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முரண்பாடுகளில் 14 சம்பவங்களுடன் விளைந்தன. இந்த முரண்பாடுகள் வரலாற்று, கலாசார அல்லது புவியியல் காரணிகளிலிருந்து முளைவிட்டிருக்கலாம்.

➔ 12 சம்பவங்களுடன் தமிழ் இனத்துவக் குழுவை உள்ளடக்கிய முரண்பாடுகள், நீர் தொடர்பான முரண்பாடுகளில் தமிழ் சனசமூகங்களுக்கு மத்தியில் உள்ள உள்ளகத் தகராறுகளும் வகிபங்கு ஆற்றுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

➔ முஸ்லிம்-முஸ்லிம் (3 சம்பவங்கள்), சிங்கள-முஸ்லிம் (5 சம்பவங்கள்), தமிழ்-தமிழ் (12 சம்பவங்கள்), மற்றும் மலையகத் தமிழ்-மலையகத் தமிழ் (11 சம்பவங்கள்) போன்ற ஏனைய இனத்துக் குழுக்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் ஒரு சிறிய எண்ணிக்கையில் உள்ளன.

## வெவ்வேறு மதக் குழுக்களிடையே முரண்பாட்டுச் சூழ்நிலைகள்:

➔ பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் உட்பட பல்வேறு மதக் குழுக்களுக்கு இடையேயான ஊடாட்டங்களில் நீர் மூலங்கள் தொடர்பான முரண்பாடுகள் சம்பந்தப்பட்டுள்ளதாக தரவு காட்டுகிறது.

➔ பௌத்தர்களுக்கு இடையே 19 முரண்பாட்டுச் சம்பவங்களுடன், அடிக்கடி நிகழும் முரண்பாடுகள் பௌத்த மதக் குழுவிற்குள் ஊடாட்டங்களைச் சம்பந்தப்படுத்துகின்றன. இது நீர் வளங்கள் தொடர்பான மதங்களுக்குள்ளே தகராறுகள் ஒப்பீட்டளவில் பொதுவானவை என சுட்டிச்சொல்கிறது.

➔ பௌத்தர்களுக்கும் மற்றும் இந்துக்களுக்கும் இடையிலான ஊடாட்டங்கள், 12 சம்பவங்களுடன் ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான முரண்பாடுகளில் விளைந்தன. இந்த முரண்பாடுகள் மத, கலாசார அல்லது புவியியல் காரணிகளிலிருந்து முளைவிட்டிருக்கலாம்.

➔ இந்து-இந்து (6 சம்பவங்கள்), இந்து-கிறிஸ்தவம் (3 சம்பவங்கள்), மற்றும் இந்து-இஸ்லாம் (2 சம்பவங்கள்) போன்ற பிற மதக் குழுக்களுடன் தொடர்புடைய சிறிய எண்ணிக்கையிலான சம்பவங்களும் உள்ளன.

➔ முரண்பாட்டிலான சிக்கல்களை விளைவித்ததாகச் சார்த்துரைக்கப்படும் அரசு நிறுவனங்கள்:

➔ இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகளில் ஈடுபட்டதாகச் சார்த்துரைக்கப்படும் பல்வேறு வகையான அரசு நிறுவனங்களைத் தரவு பிரதிபலிக்கிறது. நீர் முகாமைத்துவம், பங்கீடு, ஒழுங்குமுறை, காணிப் பயன்பாடு மற்றும் ஆளுகை ஆகியன தொடர்பான சிக்கல்களில் இருந்து இந்த முரண்பாடுகள் எழலாம்.

- 129 சம்பவங்களில், முரண்பாட்டுச் சூழ்நிலை தொடர்பான சிக்கலை விளைவிக்கும் அல்லது நிலைபேறுடையதாக்கும் 81 விடயங்கள் தொடர்பாக அரசு நிறுவனங்களின் சில வகையான சம்பந்தம் உள்ளதாக தரவு சுட்டிச்சொல்கிறது.
- அறிக்கையிடப்பட்ட 13 சம்பவங்களுடன் அடிக்கடி குறிப்பிடப்படும் நிறுவனமாக நீர்ப்பாசனத் திணைக்களம் உள்ளது. இது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையில், நீர் வளங்களை முகாமைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவை முரண்பாடுகளுக்கு ஓர் ஆதாரமாக இருக்கலாம் எனச் சுட்டிச்சொல்கிறது.
- நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையும் ஒரு கணிசமான எண்ணிக்கையிலான சம்பவங்களை (15) கொண்டுள்ளது. நீர் பங்கீடு, உட்கட்டமைப்பு மற்றும் சேவை ஏற்பாடு ஆகியன தொடர்பான சிக்கல்களுடன் இந்த முரண்பாடுகள் தொடர்புடையதாக இருக்கலாம்.
- விவசாயத் திணைக்களம் (5 சம்பவங்கள்), மாவட்டச் செயலகம் (5 சம்பவங்கள்), வனத் திணைக்களம் (6 சம்பவங்கள்), மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் (6 சம்பவங்கள்) போன்ற பல நிறுவனங்களும் முரண்பாடுகளுடன் தொடர்புடையவை என்பதுடன், காணிப் பயன்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூராட்சி ஆளுகைக் காரணிகள் ஆகியன ஒரு வகிபங்கினை வகிக்கலாம் என எடுத்துக்காட்டுகின்றன.

## முரண்பட்ட சூழ்நிலைகளில் ஈடுபடும் செயற்பாட்டாளர்கள்:

பல்வேறு மட்டங்களில் உள்ள அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், பாதுகாப்புப் படையினர், தோட்ட முகாமையாளர்கள், செல்வாக்குமிக்க தனிப்பட்டவர்கள் மற்றும் ஏனையோர் உட்பட நீர் தொடர்பான முரண்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல செயற்பாட்டாளர்களை தரவு முனைவுபடுத்துகிறது.

- அறிக்கையிடப்பட்ட 44 சம்பவங்களுடன் உள்ளூர் மட்ட அரசியல்வாதிகளே அடிக்கடி குறிப்பிடப்படும் செயற்பாட்டாளர்கள் என்பதுடன், இது அடி மட்டத்தில் நீர் தொடர்பான முரண்பாடுகளில் அவர்களின் குறிப்பிடத்தக்க வகிபங்கை எடுத்துக்காட்டுகிறது.
- நீர் தொடர்பான முரண்பாடுகளில் மாகாண மட்ட அரசியல்வாதிகள் (8 சம்பவங்கள்) மற்றும் தேசிய மட்ட அரசியல்வாதிகள் (4 சம்பவங்கள்) ஆகியோர் ஈடுபட்டுள்ளனர். இது அரசாங்கத்தின் பல்வேறு மட்டங்களிலும் அரசியல் செல்வாக்கு பரவுகிறது என்பதைச் சுட்டிச்சொல்கிறது.
- சில முரண்பாடுகளில் மதத் தலைவர்கள் (6 சம்பவங்கள்) பங்கு வகிக்கின்றனர். இருப்பினும், அவர்களின் ஈடுபாட்டின் தன்மை தரவுகளில் குறிப்பிடப்படவில்லை.
- முரண்பாடுகளில் பாதுகாப்புப் படைகள் (6 சம்பவங்கள்) சம்பந்தப்பட்டுள்ளன. இது உத்தேசரீதியில் அவை ஒழுங்கைப் பேணுவதிலும் மற்றும் பாதுகாப்பு தொடர்பான நீர் சிக்கல்களைக் கவனத்திற்கெடுப்பதிலும் அவற்றின் வகிபங்கைப் பிரதிபலிக்கின்றது.
- தோட்ட அத்தியட்சகர்களும் (5 சம்பவங்கள்) மற்றும் தோட்ட நம்பிக்கைப் பொறுப்பும் (1 சம்பவம்) இந்தத் தோட்டங்களுக்குள் தோட்ட முகாமைத்துவம் மற்றும் நீர் வளச் சிக்கல்கள் ஆகியன தொடர்பான முரண்பாடுகளுடன் இணைந்துள்ளனர்ஃஇணைந்துள்ளது.
- வர்த்தகர்கள் போன்ற வசதிபடைத்த அல்லது செல்வாக்குமிக்க நபர்கள், அவர்களின் பொருளாதார நலன்கள் காரணமாக, அனேகமாக நீர் தொடர்பான நடவடிக்கைகளில் 7 சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர்.

## முரண்பட்ட சூழ்நிலைகளால் உருவாக்கப்பட்ட சமூகப் பதட்டங்களின் வகை:

இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகள், உடல்ரீதியான முரண்பாடுகள், எதிர்ப்பாளர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் குடிமக்களையும் மற்றும் செயற்பாட்டாளர்களையும் அச்சுறுத்துதல் ஆகியன உட்பட பல்வேறு வகையான சமூகப் பதட்டங்களுக்கு வழிவகுக்கும் என்பதைத் தரவு வெளிப்படுத்துகிறது.

- அறிக்கையிடப்பட்ட 38 சம்பவங்களுடன், குழுக்களுக்கு இடையில் அல்லது குழுக்களுக்கு மத்தியில் மோதல்கள்

சமூக பதற்றத்தின் மிகவும் பொதுவான வகையாகும். இது பல்வேறு தரப்புக்களுக்கு இடையே முரண்பாடுகள் அடிக்கடி மோதல்களாக உயர்வடைவதை எடுத்துக்காட்டுகிறது.

- 17 சம்பவங்களில், போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினரால் அல்லது பொலிஸாரினால் தாக்குதல்கள் நடந்துள்ளதுடன், இது நீர் சிக்கல்கள் தொடர்பான போராட்டங்களின் அல்லது ஆர்ப்பாட்டங்களின் போது வன்முறை ஏற்படும் அபாயத்தைச் சுட்டிச்சொல்கிறது.
- குற்றம்சாட்டப்பட்டவர்களால் அல்லது சார்த்துரைக்கப்பட்ட குற்றம்சாட்டப்பட்டவர்களால் குடிமக்கள், விவசாயிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஆகியோர் மீதான தாக்குதல்கள் அல்லது செல்வாக்கு ஆகியன குறித்து 13 சம்பவங்கள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இது நீர் தொடர்பான முரண்பாடுகளில் அச்சுறுத்தலுக்கும் மற்றும் வன்முறைக்குமான சாத்தியத்தையும் முனைவுபடுத்துகிறது

## நீர் சிக்கல்கள் தொடர்பான பிரதான முரண்பாட்டுத் தூண்டுதல்கள்:

நிருவாக முடிவுகள், அபிவிருத்திக் கருத்திட்டங்கள், வெறுப்பு உரை, பாதுகாப்புப் படை நடவடிக்கைகள் மற்றும் அரசியல் அல்லது மதத் தலைவர்களின் அறிக்கைகள் ஆகியன உட்பட பல்வேறு காரணிகளால் நீர் தொடர்பான முரண்பாடுகள் தூ ண்டப்படலாம் என்பதைத் தரவு வெளிப்படுத்துகிறது.

- 46 சம்பவங்களுடன், சட்ட விரோதமானஃநியாயமற்ற நிர்வாக முடிவுகளே முரண்பாட்டிலான தூண்டுதலாக மிகவும் அடிக்கடி அறிக்கையிடப்பட்டுள்ளன. இது நீர் வள முகாமைத்துவம் தொடர்பான அரசு அதிகாரிகள் அல்லது நிர்வாக உறுப்புக்கள் எடுக்கும் முடிவுகள் சர்ச்சைகளுக்கும் மற்றும் முரண்பாடுகளுக்கும் வழிவகுக்கும் என அறிவுறுத்துகிறது.
- அபிவிருத்திக் கருத்திட்டங்கள் என்ற பெயரில் இயற்கை வளங்களைத் தவறாகப் பயன்படுத்துவது மற்றொரு குறிப்பிடத்தக்க முரண்பாட்டுத் தூண்டுதலாகும் என்பதுடன், 22 சம்பவங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. இது நீர் தொடர்பான முரண்பாடுகளுக்கு காடழிப்பு, சுரங்கமறுத்தல் அல்லது காணி கையகப்படுத்தல் போன்ற செயல்பாடுகளைச் சம்பந்தப்படுத்தக்கூடிய பாரிய அளவிலான அபிவிருத்தி கருத்திட்டங்கள் பங்களிக்கக்கூடும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.
- அறிக்கையிடப்பட்ட 18 சம்பவங்களில் ஏதோவொரு தரப்பினரில் வெறுப்பு உரை விளைந்துள்ளதுடன், இது நீர் சிக்கல்கள் தொடர்பான முரண்பாடுகளை அதிகப்படுத்துவதில் எரிச்சலூட்டும் சொல்லாட்சியின் பங்கை முனைவுபடுத்துகிறது.
- பாதுகாப்புப் படைகளின் குறுக்கீடுகள்ஃநடத்தைகள் 4 அறிக்கையிடப்பட்ட சம்பவங்களுக்கு வழிவகுத்துள்ளதுடன், பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் அல்லது நடத்தை சில சமயங்களில் நீர் தொடர்பான முரண்பாடுகளுக்கு பங்களிக்கக்கூடும் எனச் சுட்டிச்சொல்கிறது.
- அரசியல் அல்லது மதத் தலைவர்களின் அறிக்கைகள் 2 சம்பவங்களுக்கு வழிவகுத்துள்ளதுடன், இது நீர் வளங்கள் தொடர்பான முரண்பாடுகளைத் தூண்டுவதில் செல்வாக்குமிக்க நபர்களின் பொது அறிக்கைகளும் வகிபங்கினை ஆற்றலாம் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

## நீர் தொடர்பான முரண்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:

முறையான முறைப்பாடுகள், சட்ட நடவடிக்கைகள், எதிர்ப்புக்கள் அத்துடன் அரசாங்க அதிகாரிகளுடனும் மற்றும் மத நிறுவனங்களுடனுமான ஈடுபாடு ஆகியன உட்பட, இலங்கையில் நீர் தொடர்பான முரண்பாடுகளுக்கு பதிலளிக்கும் வகையில் எடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளை தரவு பிரதிபலிக்கிறது.

- பொலிஸில் தாக்கல்செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 16 விடயங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இது சட்ட வினைப்படுத்தல் அதிகாரிகளுக்கு தனிநபர்கள் முறையாக முரண்பாடுகளைப் அறிக்கையிட்டுள்ளதாகவும் எடுத்துக்காட்டுகிறது.

- ஒரு விடயத்தில் அமைதியான போராட்டங்கள் நடந்துள்ளதுடன், இது நீர் தொடர்பான முரண்பாடுகளுக்கு பதிலாக வெளிப்படுத்தலின் அமைதியான வடிவமொன்றைச் சுட்டிச்சொல்கிறது.
- 55 விடயங்களுடன் பிரதேசச் செயலகத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் மிகவும் பொதுவான நடவடிக்கையாக விளங்குதுடன், இது முரண்பாடுகளைத் தீர்ப்பதில் உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களின் வகிபங்கை முனைவுபடுத்துகிறது.
- 13 விடயங்களில் மாவட்டச் செயலகத்திற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், இது முரண்பாடுகள் உயர் நிருவாக மட்டங்களுக்கு விரிவடைவதை எடுத்துக்காட்டுகிறது.
- இரு விடயங்களில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், இது நீர் தொடர்பான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைச் சுட்டிச்சொல்கிறது.
- மத்தியஸ்த குழுவிற்கு முறைப்பாடும் மற்றும் ஒரு மத நிறுவனத்திற்கு/தலைவருக்கு முறைப்பாடும் என ஒவ்வொன்றும் ஒரு விடயத்தில் நிகழ்ந்துள்ளதுடன், இது முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான மாற்று முறைகளைச் சுட்டிச்சொல்கிறது.
- 12 விடயங்களில் ஏனைய அரசு அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், இது பல்வேறு அரசு அமைப்புகள் முரண்பாட்டினைத் தீர்க்கும் முயற்சிகளில் ஈடுபடுவதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- தோட்ட முகாமைத்துவத்திற்கு/தோட்ட நம்பிக்கைப்பொறுப்புக்கு இரு விடயங்களில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன், இது தோட்டங்களுக்குள் நீர் வளங்கள் தொடர்பான முரண்பாடுகளைக் கவனத்திற்கெடுப்பதில் தோட்ட முகாமைத்துவத்தின் ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகிறது.
- 24 விடயங்களில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதுடன், இது சில சந்தர்ப்பங்களில், முரண்பாடுகள் தொடர்ந்துமே தீர்க்கப்படாமலோ அல்லது கவனிக்கப்படாமலோ இருக்கும் என்பதைச் சுட்டிச்சொல்கிறது.


**அத்தியாயம் மூன்று**

# சுருக்கப் பகுப்பாய்வு


இந்த சுருக்கப் பகுப்பாய்வு சமூக-பொருளாதார மற்றும் அரசியல் சிக்கல்கள் தொடர்பாக முரண்பாட்டுத் தூண்டுதல்களை முன்கூட்டியே கண்டறிவதை உறுதிசெய்ய மேம்பட்ட திறன் கொண்ட அமைதியைக் கட்டியெழுப்பவர்களைக் கொண்ட குழுவால் பகிரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்தச் சுருக்கமான பகுப்பாய்வில், முரண்பாடான சூழ்நிலைகள், சம்பந்தப்பட்ட தரப்புக்கள், சமூகப் பதட்டங்களின் வகை மற்றும் முக்கிய முரண்பாட்டுத் தூண்டுதல்கள் ஆகியவற்றுடன் தொடர்புடைய முக்கிய பிரச்சனைகள், கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி குறுகிய காலத்தில் நாடு முழுவதும் அமைதியைக் கட்டியெழுப்பவர்களால் அடையாளங்காணப்பட்டுள்ளன. அதன்படி, இந்தக் குறிப்பு, நீர் தொடர்பாக தற்போதுள்ள முரண்பட்ட சூழ்நிலைகளின் முழுமையற்ற பகுப்பாய்வாகவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் உடனடியாக கவனிக்கப்படாவிட்டால், சமூக ஒற்றுமையை மோசமாகப் பாதிக்கும் சாத்தியமான சம்பவங்களின் ஒரு சுருக்கமான நிழற்பட நொடிப்பெடுப்பாகவும் விளங்குகிறது. நாடு முழுவதும் உள்ள அமைதியைக் கட்டியெழுப்புபவர்கள் இந்த முடிவுகளை துணை தேசிய அளவிலான ஆதரித்துவாதாடுதல் உரையாடல்களை உருவாக்கவும் அத்துடன் ஒரு நெருக்கடிநிலையிலான பொறிமுறையாகச் செயல்படுத்தவும் பயன்படுத்துகின்றனர்.

வரைபு 1. நீர் தொடர்பான முக்கிய பிரச்சனைகளின் வகை





யாழ்ப் பாணம்
கிளிநொச்சி
முல்லைத்தீவு
வவுனியா
மன்னார்
திருகோணமலை
அனுராதபுரம்
பொலன்னறுவை
புத்தளம்
மட்டக்களப்பு
குருநாகல்
மத்தலை
கண்டி
அம்பாறை
கேகாலை
நுவரெலியா
பதுளை
களுத்துறை
ரத்தினபுரி
காலி
அம்பாந்தோட்டை
யாழ்ப் பாணம் 1
கிளிநொச்சி 6
முல்லைத்தீவு 5
மன்னார் 10
வவுனியா 4
திருகோணமலை 6
அனுராதபுரம் 10
புத்தளம் 6
பொலன்னறுவை 6
மட்டக்களப்பு 16
மத்தலை 4
அம்பாறை 6
பதுளை 3
கேகாலை 1
நுவரெலியா 14
கண்டி 2
ரத்தினபுரி 15
களுத்துறை 1
காலி 7
அம்பாந்தோட்டை 6


வரைபு 2. நீர் தொடர்பாக அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் – மாவட்ட அடிப்படையில்





வரைபு 3. அனுராதபுரம் மாவட்டத்தில் நீர் தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் – பிரதேச செயலக அடிப்படையில் (10 சம்பவ முறைப்பாடுகள்)





வரைபு 4. மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர் தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் – பிரதேச செயலக அடிப்படையில் (16 சம்பவ முறைப்பாடுகள்)




வரைபு 5. மன்னார் மாவட்டத்தில் நீர் தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் - பிரதேச செயலக அடிப்படையில் (10சம்பவ முறைப்பாடுகள்)





வரைபு 6. நுவரேலியா மாவட்டத்தில் நீர் தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் - பிரதேச செயலக அடிப்படையில் (14சம்பவ முறைப்பாடுகள்)





வரைபு 7. நுவரேலியா மாவட்டத்தில் நீர் தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக அடையாளம் காணப்பட்ட முக்கிய பிரச்சினைகள் - பிரதேச செயலக அடிப்படையில் (15 சம்பவ முறைப்பாடுகள்)




வரைபு 8 . முரண்பட்ட சூழ்நிலையுடன் தொடர்புடைய பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் - அரசாங்க நிறுவனம் வாரியாக





வரைபு 9. முரண்பட்ட சூழ்நிலையுடன் தொடர்புடைய பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் - பாதுகாப்புப் படைகளின் அடிப்படையில்




வரைபு 10. முரண்பட்ட சூழ்நிலையுடன் தொடர்புடைய பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் - பிற தரப்பினர்களின் அடிப்படையில்





வரைபு 11. முரண்பட்ட சூழ்நிலையுடன் தொடர்புடைய பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் - இனத்தின் அடிப்படையில்





வரைபு 12. முரண்பட்ட சூழ்நிலையுடன் தொடர்புடைய பிரச்சினையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் - மதத்தின் அடிப்படையில்




வரைபு 13. மோதலுடன் தொடர்புடைய பிரச்சினையை உருவாக்குவதில்/நிலைப்படுத்துவதில் அரசாங்க நிறுவனங்களின் ஈடுபாடு உள்ளதா? நிலைமை?





வரைபு 14 . பிரச்சினையில் செல்வாக்கு செலுத்தி உள்ளதாக கருதப்படும் அரச நிறுவனகள்




வரைபு 15. முரண்பட்ட சூழ்நிலையில் ஈடுபட்டுள்ள செயட்பாட்டாளர்கள்





வரைபு 16. முரண்பட்ட சூழ்நிலையின் காரணமாக உருவாக்கப்பட்ட சமூக பதட்டங்களின் வகைகள்




வரைபு 17. சமூக பதட்டங்களை அதிகரிக்கச் செய்த முக்கிய மோதல் தூண்டற்காரணிகள்



## வரைபு 18. முரண்பட்ட சூழ்நிலைகளில் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்



VOICE OF CITIZENS

CENTRE FOR POLICY ALTERNATIVES

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

www.facebook.com

www.twitter.com

www.youtube.com